Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. STC.27/2021

**P.W**. 3(LW6)

| | |
|---|---|
| Name | : திரு. லட்சுமிபதி |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.07.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது செங்கல்பட்டு மாவட்ட குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.

2) கடந்த 02.02.2017 ம் தேதி மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவில் குற்ற எண். 54/2017 சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1–A) TNP Act r/w 6 & 11 of RS Rules– என்கிற வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 07.06.2017 அன்று தலைமை காவலர் 246 குணசேகரன் என்பவர் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை ரசாயன பகுப்பாய்விற்கு வேண்டி சென்னை தடய அறிவியில் ஆய்வாகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றேன். சென்னை தடய அறிவியல் துறை இயக்குனர் டாக்டர் அன்வர்சித்திக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் நச்சுத்தன்மை இல்லை என்று சான்றளிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கின் சட்டப்பிரிவினை 4(1)(a), 4(1–A) TNP Act r/w 6 & 11 of RS Rules லிருந்து 4(1)(a),TNP Act r/w 6 & 11 of RS Rules ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 4(1) (a), TNP Act r/w 6 & 11 of RS Rules ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

இந்த வழக்கை நான் எந்த தேதியிலிருந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 07.06.2017 அன்று என் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தலைமை காவலர் 246 குணசேகரன் என்பவரின் வாக்குமூலம் ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது விசாரணையில் 09.06.2017 ம் தேதி சென்னை அறிவியல் தடய ஆய்வகத்திற்கு சென்று அவர்கள் கொடுத்த முத்திரையுடன் கூடிய ம.வி.எண் 155/2017 ஐ பெற்று வந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார் என்பதை பதிவு செய்துள்ளேன். 5 மாதங்கள் காலதாமதமாகத்தான் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை ரசயான பகுப்பாய்விற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். சென்னை தடய அறிவியல் துறை இளநிலை அறிவியல் அலுவலர் அன்வர்சித்திக் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் நச்சுத்தன்மையுடன் கூடிய எரிசாராயம் இல்லை என்று சான்று வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யாமல் என்னுடைய சக அதிகாரிகள் தயார் செய்து வைத்திருந்த பொய்யான இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.